கணக்கை அவர்கள், 2 கிலோ மீட்டர் என்று, காகத்தைப் பறக்கவிட்டு கணக்கு எடுத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். உண்மையிலே பார்த்தால் நான் சொல்கிற கிலோ மீட்டர் வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து — ஏற்கெனவே, பக்கத்திலே ஜோகி காலனி என்று ஒன்று இருக்கிறது — அதையும் கணக்கெடுத்துப் பார்ப்பார்கள் என்று சொன்னால், அங்கே அகமேட்டிலிருந்து அதிக தொலைவு சென்று, அந்த இடத்திலே உடனடியாக பொருட்களை வாங்க முடியாமல் தவிக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகுதி நேரக்கடை அமைக்க வேண்டும். பகுதி நேரக்கடைக்கு இடத்தை இனாமாக தருகிறார்கள், பொறுப்பு எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே, பகுதி நேரக்கடையாவது தாராள மனப்பான்மையுடைய அமைச்சர் அவர்கள் தர வேண்டும். உணவு அமைச்சரும் அறிவித்திருக்கிறார்கள். தயவுசெய்து, அந்த அகமேடு கிராமத்தில் உடனடியாக, அங்கே ஜோகி காலனி ஒட்டியிருக்கின்ற காரணத்தினாலே, இரண்டுக்கும் சேர்த்து, அந்த இடத்திலே பகுதி நேரக்கடையை திறப்பதற்கு மறுபடியும் அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகமேடு மீது அக்கறை காட்டுகிற மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுடைய விருப்பத்தை, பகுதி நேரக் கடையாக இந்த அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 80, திரு. இ. கணேசன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

80—

கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிடம்

* *423*—**திரு. இ. கணேசன் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1996 ஆகஸ்டு 5]

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இருப்பினும், சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதியதாக மீண்டும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி உள்ளமைப்பு மூலம் ரூ.12.60 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ள துறையின் அனுமதி சேலம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் புதியதாக கால்நடை மருத்துவமனை கட்டித்தரப்படும் என்று சொன்னார்கள். அதற்கு எடப்பாடி மக்கள் சார்பாக அவருக்கு நன்றியைச் சொல்லிக்கொண்டு, 1986-வது ஆண்டு இந்த மருத்துவமனை மிகவும் பழுதடைந்துவிட்டது என்று கிராமப் பணித் துறை உதவி கோட்டப் பொறியாளர் மூலமாக அரசுக்கு தெரியப்படுத்தி, இதுவரை, 9 இலட்சம் ரூபாய் அதாவது 1993-94-ல் 9 இலட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டது. 1994-95-ல் ரூ. 11 இலட்சமாக திருத்தி மதிப்பிடப்பட்டது. 1995-96-ல் ரூ. 12.6 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. 1996-97-ல் ரூ. 14.5 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. இதனால் அரசுக்கு 5 ½ இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏன் இவ்வளவு காலமாக அந்த அரசு கால்நடை மருத்துவமனை கட்டப்படவில்லை ? உடனடியாக கட்ட அரசு இந்த ஆண்டு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பழைய அரசுதான் பதில் சொல்ல வேண்டும். வருங்காலத்தில் உங்களுடைய கோரிக்கை ஏற்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி வாசுகி முருகேசன்.

திருமதி வாசுகி முருகேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யூனிட் கால்நடை என்பது எவ்வளவு? எத்தனை யூனிட்டுக்கு ஒரு கால்நடை மருத்துவ நிலையம் அமைக்க அரசு விரும்புகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யூனிட் என்பது ஒரு மாடு அல்லது ஒரு எருமை, தவிர ஒரு யூனிட் என்பது 10 ஆடுகள் அல்லது 20 பன்றிகள் அல்லது 100 கோழிகள் போன்ற பறவைகள். ஒரு கால்நடை மருத்துவ நிலையம் ஒரு இடத்திலே அமைய வேண்டுமானால், இந்தியாவினுடைய கணக்குப்படி, இந்திய அரசின் கொள்கைப்படி 700 யூனிட்டுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைய வேண்டும். ஆனால், இன்றைக்கு தமிழகத்திலே 7 ஆயிரம் யூனிட்டுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க முடியாமல், 14 ஆயிரம் யூனிட்டுகளுக்கு ஒரு கால்நடை மருத்துவமனைதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. குண்டன்.

திரு. தா. குண்டன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கால்நடை மருந்தகம் அமைய என்ன நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் புதியதாக கால்நடை மருந்தகம் அமைய வேண்டுமானால், கீழ்க்கண்ட தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்பட வேண்டும்:

(1) கால்நடை மருந்தகம் துவக்கக் கோரும் கிராமத்தின் பெயரைக் குறிப்பிட்டு, அந்தக் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமையக் கோருதல்;

(2) கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்ட குறைந்தது ஒரு ஏக்கர் நிலமாவது கால்நடை பராமரிப்புத் துறைக்கு அந்தக் கிராம மக்கள் இனாமாக வழங்க வேண்டும் ;

(3) கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டி முடிக்கும்வரை, மருந்தகம் செயல்படுவதற்கு வாடகையில்லாக் கட்டிடம் அளிப்பதற்கு அந்தக் கிராமத்தினர் முன்வரவேண்டும்;

முற்பகல் 10-10

(4) கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவினுடைய பங்குத்தொகையினை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து வழங்க சம்மதிக்கவேண்டும். முதலாவது கால்நடை மருந்தகம் அமையவேண்டுமென்றால் ஒன்றியம் 25 சதவீதமும், அந்த

ஒன்றியத்திலேயே இரண்டாவது கால்நடை மருத்துவமனை அமைய வேண்டுமென்றால் *50* சதவீதமும், மூன்றாவது கால்நடை மருந்தகம் அந்த ஒன்றியத்தில் அமையவேண்டுமென்றால் *75* சதவீதமும் நான்காவது கால்நடை மருந்தகம் அமையவேண்டுமென்றால் நூறு சதவீதமும், அதற்கு மேலும் அமையவேண்டுமென்றால் முழுவதாகவும் அந்த ஒன்றியங்கள் பங்கு கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோ. மோகனதாசன்.

திரு. கோ. மோகனதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பூம்புகார் தொகுதியில் செம்பனார்கோவில் ஒன்றியத்திலே சுக்கிரமுடி ஊராட்சியில், சங்கரம்பந்தல் என்ற ஒரு ஊரில் கால்நடை மருத்துவ நிலையம் உள்ளது. அங்கே கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு பொதுமக்களும் இலவசமாக இடத்தை வழங்கியிருக்கிறார்கள். எனவே அந்தக் கால்நடை மருத்துவமனை விரிவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *81*, மாண்புமிகு உறுப்பினர்கள் கு. மனோகரன் மற்றும் பே.வே. ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

81—

அதியமான் கோட்டம் அமைத்தல்

2007*—திரு. கு. மனோகரன் :**

திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் அதியமான் கோட்டம் அமைக்கும் திட்டத்தினை நிறைவேற்றிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?